## கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!



சென்னைவடகிழக்குமாவட்டம்மாதவரம்தொகுதிக்குட்பட்டதெற்குபகுதியில் உள்ள வார்டு 25–ல் மற்றும் வார்டு 26–ல் பொதுமக்களின் பெரும் ஆதரவோடு மாதவரம் எஸ்.சுதர்சனம் பரப்புரை மேற்கொண்டார். இந்நிகழ்வில் தெற்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



இராயபுரம் மேற்கு பகுதி 53வது வட்ட பகுதி பிரதிநிதி மூ. ஜானகிராமனின் மழலை ஜா.யாழினி ராயபுரம் வேட்பாளர் டாக்டர் சுபேர்கானுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். உடன் வட்ட கழக செயலாளர் பாலாலட்சுமணன், ராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வா.பெ.சுரேஷ் மற்றும் கழக மூத்த முன்னோடி வி.முனுசாமி, எம்.கோபி, எம்.எஸ்.உதயசூரியன், பி.ஆனந்த், பி.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் எல். சுந்தர்ராஜை ஆதரித்து திருவொற்றியூர் 8வது வார்டில் தலைமை பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில், வட்டக் கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் முன்னிலையில் பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்ச்சியில் சு.சந்தானம், டி.டி.எம்.பாபு, ஒய்.நந்திவர்மன், ஜெ. பி.சந்தானகிருஷ்ணன், அ. அருளானந்தம், சுகந்தா முனுசாமி, கிழக்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.மணிகண்டன், தினேஷ் வேலன், எம்.எஸ்.பாண்டியன், வி.ஆர்.சீனிவாசன், செல்வதாஸ், எம்.கணேசன், சின்ன பாப்பா சத்திய குமார், எம்.எஸ்.பி.பிரபாகரன், மூர்த்தி, தி.மு. சரவணன், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தோழர்கள் உள்ளிட்ட கூட்டணி கட்சித் தோழர்களும் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



ஆலந்தூர் கிறிஸ்துவ ஆலயத்தில் கழக வேட்பாளர் தா.மோ. அன்பரசனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். உடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், வட்டச் செயலாளர் முரளி கிருஷ்ணன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



களத்தில் இளைஞர் அணி என்ற தலைப்பில் மாதவரம் சட்டமன்றத் தொகுதி புழல் ஒன்றியம் விளங்காடுப்பாக்கம் ஊராட்சி மேட்டு தெரு கிராமத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் வேட்பாளர் மாதவரம் எஸ் சுதர்சனத்துக்கு ஒன்றியச் செயலாளர் சி. அற்புதராஜ் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் ஆலோசனைபடி, மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே. இனியன் வாக்கு சேகரித்தார். உடன் இளைஞர் அணி நிர்வாகிகள் எச்.எஸ்.தீனதயாளன், பிரபு ஜி.சதீஷ், ராம்குமார், கே.செல்வகுமார், பி.சுரேஷ்குமார், எச். தருண் ஆனந்த், என். சுந்தர், டி.ஜான்சன், எச்.அம்பேத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



ஆலந்தூர் வடக்கு பகுதி 161வது வட்டம் , பாகம் எண் –268 ஸ்டேட் பேங்க் காலனி பகுதியில். ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தா.மோ.அன்பரசனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர். ஆலந்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி பகுதி ஒருங்கிணைப்பாளர் த. தரணிவேந்தன் சிறுபான்மையினர் அணி பகுதி துணை அமைப்பாளர் எ.திலிப், எம்.பி.கவுஸ், மாணவரணி பகுதி துணை அமைப்பாளர் தே.சுவாமிநாதன் மற்றும் தேவேந்திரன் நாகராஜ்,கோபி,ரஞ்சன் ஆகிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்..

### திருவள்ளூர் அருகே உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட

## அ.தி.மு.க. சார்பில் அச்சிடப்பட்ட ரூ.2000, ரூ.10 ஆயிரம் மாதிரி காசோலைப் புத்தகங்கள்!

### அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்!



திருவள்ளூர், ஏப்.20:

திருவள்ளூர் அருகே உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுவரப்பட்ட அதிமுகவின் தேர்தல் அறிக்கையுடன் கூடிய துண்டு பிரசுரம், ரூ.2000, ரூ.10000 மதிப்பிலான 15 ஆயிரம் மாதிரி காசோலை புத்தகங்களையும் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து தேர்தல் நடத்தும் அலுவலர் ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்தனர். தமிழக சட்டமன்றத் தேர்தல் வருகிற 23ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் அனைத்து கட்சி வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வாக்கு பதிவுக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில் வாக்காளர்களுக்கு பணம், பொருட்கள் கொண்டு செல்வதை கட்டுப்படுத்தும் வகையில் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல் திருவள்ளூர் அடுத்த ஈக்காடு மூலக்கரையில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த வழியாக வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி பரிசோதனை செய்தனர். அந்த வாகனத்தில் அதிமுகவில் தேர்தல் வாக்குறுதிகளா ன துண்டு பிரசுரங்கள், ரூ.2000, ரூ.10000 மதிப்பிலான தலா 10 எண்ணிக்கையில் 15 ஆயிரம் மாதிரி காசோலை புத்தகங்கள் அடங்கிய பண்டல்கள் இருந்தது.

இதையடுத்து மேற்கொண்ட விசாரணையில் தாம்பரம் பகுதியில் இருந்து திருத்தணி தொகுதிக்கு கொண்டு செல்வதாகவும் தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பாலாஜி மற்றும் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வந்ததால் திருவள்ளூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மார்க்சிஸ்ட் வேட்பாளர்

## எல்.சுந்தர்ராஜை ஆதரித்து திருவொற்றியூர் 8-வது வார்டில் பிரச்சாரம்!

### இரா.முருகேசன் – டி.சி.வி. மணிகண்டன் பங்கேற்பு!

சென்னை, ஏப்.20-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் எல்.சுந்தர்ராஜ் அவர்களை ஆதரித்து திருவொற்றியூர் 8வது வார்டில் தலைமை பொதுக் குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமையில், வட்டக் கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் முன்னிலையில் பாரதி நகர், இரட்டைமலை சீனிவாசன் நகர், கமலா நகர், காவிரி நகர், ஜெகஜீவன் ராம் நகர், சிவப்பிரகாசம் நகர் போன்ற பகுதிகளில் வேட்பாளருக்கு ஆதரவாக பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் வாக்கு சேகரித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகப் பிரதிநிதிகள் சு.சந்தானம், டி.டி.எம். பாபு, ஒய்.நந்திவர்மன், ஜெ.பி.சந்தானகிருஷ்ணன், அ. அருளானந்தம், சுகந்தா முனுசாமி, கிழக்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எம். மணிகண்டன், தினேஷ் வேலன், எம்.எஸ்.பாண்டியன், வி.ஆர்.சீனிவாசன், செல்வதாஸ், எம்.கணேசன், சின்ன பாப்பா சத்திய குமார், எம்.எஸ்.பி.பிரபாகரன், மூர்த்தி, தி.மு. சரவணன், இடது கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த தென் சென்னை மாவட்ட பொருளாளர் மா.சிந்தன், 123 வது வார்டு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி, மல்லிகா, வசந்தி, பழனி, சிங்காரம், விஜயலட்சுமி, சீதா, தமிழ்ச்செல்வி, செல்வகுமாரி, மல்லிகா, அபிநயா, நித்யஸ்ரீ, தனுஸ்ரீ பிரியா, விஜய லட்சுமி, சக்திவேல், மனோகரன், லெனின் நான்சி, ஸ்ரீ சுவேதா, வேல்முருகன், சிவக்குமார், ஆனந்த், சிவகுமார், மோகன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தோழர்கள் உள்ளிட்ட கூட்டணி கட்சித் தோழர்களும் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

### தென்காசி தொகுதி கழக வேட்பாளர் மரு.கலை கதிரவன்

## கீழப்பாவூர் மத்திய ஒன்றியத்தில் தீவிரப் பிரச்சாரம்!

### பொ.சிவபத்மநாதன் - ஜேசுராஜன் பங்கேற்பு!

தென்காசி. ஏப்.17.

தென்காசி மாவட்டம் தென்காசி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவன் ஒன்றிய அரசின் தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கருப்பு சட்டை அணிந்து கீழப்பாவூர் மத்திய ஒன்றியம் துவரங்காடு கிராமத்தில் தேர்தல் வாக்கு சேகரிப்பு பிரச்சாரத்தை முன்னாள் தென்காசி மாவட்ட செயலாளர் பொ.சிவ பத்மநாதன் ஒன்றிய பொறுப்பாளர் ஜேசு ராஜன் ஆகியோர் முன்னிலையில் தெருத் தெருவாக சென்று வாக்கு சேகரித்தார்.அப்போது வீடு வீடாக பெண்கள் ஆரத்தி எடுத்து,மலர் தூவி, நெற்றியில் திலகமிட்டு தங்கள் மகிழ்ச்சியை தெரிவிக்கும் வகையில் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து 13 கிராமங்களில் கொளுத்தும் வெயிலில் தீவிரமாக வாக்கு சேகரித்தார்.இந்நிகழ்வின் போது 35 ஆண்டு காலம் துவரங்காடு அ.தி.மு.க. கிளை செயலாளராக இருந்த வெளியப்பசாமி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவன்

தென்காசி தொகுதியில் சூறாவளி சுற்றுப்பயணமாக வாக்கு சேகரிப்பு பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

அதன்படி கீழப்பாவூர் மத்திய ஒன்றியம்

துவரங்காட்டில் தெரு தெருவாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார் அப்போது பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆரத்தி வீடு வீடாக ஆரத்தி எடுத்து, மலர் தூவி, நெற்றியில் திலகமிட்டும் வரவேற்பு அளித்தனர்.

## கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!



சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்தில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன், பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டச் செயலாளர் சை.மு.சேகர் ஆகியோர் தலைமையில் சைதை சாதிக், டி.என்.சிவமணி,இ.வரதன், மா.ஏழுமலை,பி.எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன்,பூபதி.வெங்கடேசன். வெ.புருசோத்தமன், ப.நரேஷ் ஆகியோர் முன்னிலையில் ஆயிரக்கணக்கான மகளிர் வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் ஜி.ஏழுமலை, கொடி.து.சுரேஷ்பாபு, எஸ்.முகமது அலி,யமஹா ராஜேஷ், நியு காலனி சம்பத், சார்ப்.சரவணன், த.சேகர், கே.பாரி,ப.எழிலரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிள் பங்கேற்றனர்.



குன்னம் தொகுதி வெற்றி வேட்பாளர் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கரை ஆதரித்து தி.மு.க. மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொல்லாபுரம் ச.ராஜேந்திரன் செந்துறை தெற்கு ஒன்றிய பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது ஒன்றிய செயலாளர் செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர் குளஞ்சேல்,மாவட்டப் பிரதிநிதி காளமேகம் மற்றும் கழக தொண்டர்கள் உடனிருந்தனர்.



ராயபுரம் மேற்கு பகுதி வார்டு 53–க்கு உட்பட்ட சி.பி,. ரோடு சாலையிலுள்ள பொது மக்களிடம் வேட்பாளர் மருத்துவர் சுபேர்கானுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர். இதில் சென்னை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் – மாமன்ற உறுப்பினர் பா வேளாங்கண்ணி உள்ளிட்ட கழக மகளிர்கள் மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.



சைதை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து சைதை மேற்கு பகுதி 142 வது (அ) வட்டம் பாகம் 91ல் உள்ள கவரை தெரு, ரங்கபாஷ்யம் தெரு, ரங்கபாஷ்யம் சந்து ஆகிய தெருக்களில் வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் முன்னிலையில் பகுதி துணை அமைப்பாளர் ஆர். டி.மூர்த்தி வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குக்கள் சேகரித்தார். உடன் வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், மகளிர் அணியின்ர் பெருந்திரளராக பங்கேற்றனர்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் மருத்துவர் எழிலன் நாகநாதனை ஆதரித்து தியாகராயர்நகர் தெற்கு போக் சாலையில் உதயசூரியன் சின்னத்திற்கு கழகத் தலைவர் அவர்கள் வாக்கு சேகரிக்க வருகை புரிந்த போது தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொருளாளர் கி.சீனிவாசன், பொது நிர்வாக பணியாளர் முன்னேற்ற சங்க பொது செயலாளர் வி.மகேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் பெருந்திரளாக கருப்பு, சிவப்பு சீருடையில் சிறப்பான வரவேற்பு அளித்து வாக்கு சேகரித்தனர்.



ஆலந்தூர் தெற்கு பகுதி, 167 வது வார்டு ஐப்பன் நகர், டி.என்.ஜி.ஓ. காலனி, ஸ்ரீராம் காலணி, 100 அடி ரோடு ஆகிய இடங்களில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன் தலைமையில், ஆலந்தூர் தொகுதி திமுக வெற்றி வேட்பாளர் தா.மோ. அன்பரசனை ஆதரித்து, 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள்,மூத்த கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர்.